Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2003 Public Examination

# Tamil

## Continuers Level

**Tuesday 21 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You may not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be used.*

## Section 1: Listening and Responding (30 marks) Click here

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2003*

www.theallpapers.com

**Part A** (Questions 1–4)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear FOUR texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1** Click here

1. (a) Tick the correct box **1**

The request was made by

(A) the radio station. ☐

(B) Mr Sithamparapillai. ☐

(C) the management of the old age centre. ☐

(D) the old people of Arivalayam. ☐

(b) Tick the correct box **1**

This voluntary service is requested

(A) annually. ☐

(B) weekly. ☐

(C) on Christmas Day. ☐

(D) on New Years Day. ☐

(c) According to the text, what sort of person is likely to promote a lovely environment? **1**

____________________________________________

____________________________________________

(d) If you wanted to participate in this voluntary service, what would you need to do? **1**

____________________________________________

____________________________________________



www.theallpapers.com

Marks | You may make notes in this space.

**Text 2** Click here

2. You have booked a ticket from your capital city to Colombo through SriLankan Airlines. When you contacted the airlines to get details of your flight time and seat allocation you received this recorded message. Write the steps you followed to find the necessary information. **3**

**Text 3** Click here

3. (a) Why is Anandan going to the College Hall? **1**

(b) What is there in the text to suggest that even young members of the extended family take interest in each others' business? **1**

(c) Why did Anandan and his son Pakirathan go to Kalaimagal Stores? **2**



www.theallpapers.com

Marks | You may make notes in this space.

**Text 4** Click here

4. (a) What three things provide evidence that Mrs Vaitheeswaran is able to organise her time efficiently? **3**

- ______
- ______
- ______

(b) Give two examples from the text that show how Mrs Vaitheeswaran uses her artistic skills in her garden. **2**

- ______
- ______

(c) In what ways does Mrs Vaitheeswaran demonstrate ways of economising in the garden? **2**

- ______
  ______
- ______
  ______

(d) Give two reasons why someone who hears this interview will admire Mrs Vaitheeswaran. **2**

- ______
  ______
- ______
  ______



www.theallpapers.com

**Part B** (Questions 5–6)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 5 and one relating to Question 6. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 5** Click here

5. (a) What is meant by 'the golden world'? Explain. **1**

'பொன்னுலகு' என்பதால் கருதப்படுவது யாது? விளக்குக.

___

___

___

(b) What are two duties that married couples are expected to perform in family life? **2**

இல்லறவாழ்வின்போது மணமக்களிடம் எதிர்பார்க்கப்படும் கடமைகள் இரண்டைக் குறிப்பிடுக.

- ___

  ___

- ___

  ___



www.theallpapers.com

Marks | You may make notes in this space.

**Text 6** Click here

6. (a) With reference to the text, comment on three things the Past Students Association has done to improve the assets of the school. **3**

நீர் கேட்ட உரைப்பகுதியிலிருந்து பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலைச் சொத்துக்களை விருத்தி செய்வதற்கு எடுத்த நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக.

- ____________________________
- ____________________________
- ____________________________

(b) Provide evidence from the text that the Past Students Association is strongly supported. **1**

'பழைய மாணவர் சங்கத்துக்குப் பேராதரவு கிடைத்தது'. உரையிலிருந்து சான்றுகள் தருக.

(c) What does the passage suggest might be the reason for the increase in the number of new members and of contributions to the magazine? **1**

பல புதிய அங்கத்தவர்கள் சேர்ந்தமைக்கும் மலருக்குப் பல ஆக்கங்கள் கிடைத்தமைக்கும் பந்தியில் குறிப்பிடப்படும் காரணம் எதுவாக இருக்கலாம்?

(d) Find two features or expressions typical of this text type. **2**

இந்த வகையான எழுத்தாக்கங்களில் காணப்படக்கூடிய அம்சங்கள் அல்லது சபையோரை விளித்துப் பேசப்படும் விடயங்கள் இரண்டை அடையாளங்கண்டு குறிப்பிடுக.

- ____________________________
- ____________________________

**End of Section 1**



www.theallpapers.com

BLANK PAGE

www.theallpapers.com

BLANK PAGE

www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2003 Public Examination

# Tamil

## Continuers Level

## Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© *Victorian Curriculum and Assessment Authority 2003*

www.theallpapers.com

**Part A** (Questions 7–8)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## சென்னையில் சிறப்புச் சந்தைகள்

சென்னையில் காய்கறி விற்பனைச் சிறப்புச் சந்தைகள் ஆரம்பிக்கப்பெற்றுள்ளன. பரமசிவம் என்பவர்தான் முதன்முதலாக பிரம்பூரில் இந்தமாதிரியான சிறப்புச்சந்தையை மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்தார். மரியாதையுடன் நடந்து கொள்ளும் ஊழியர்கள், இனிய வார்த்தைகள், புத்தம்புதிய காய்கறிகள், குறைந்தவிலை என்பவற்றை முன்நிறுத்திக் காட்டியதால் மக்களின் அமோக ஆதரவு கிடைத்ததாக அவர் கூறுகிறார்.

சென்னையில் இப்பொழுது பல பகுதிகளிலும் உள்ள **65** சந்தைகளில் ரூபா **25,000–30,000** வரைக்கும் காய்கறிகள் விற்கப்படுகின்றன. மண்தரை, மிதிபட்டு அழுகிய நசுங்கிய காய்கறிகள், மழையையும் வெயிலையும் பாரபட்சமின்றி வாரிவழங்கும் திறந்தவெளி என்று சாதாரண காய்கறிக் கடைகளுக்கான இலட்சணங்கள் இல்லாமல் நல்ல கட்டிடம், சிறந்த மின்வெளிச்சம், பராமரிக்கப்படும் சீமெந்துத்தரை, பணம் செலுத்த மேசை (காஷ் கவுண்டர்–Cash counter) என்று கிட்டத்தட்ட அலுவலகப் பாணியில் இங்கு விற்பனை நடக்கிறது.

இதன் மற்றோர் சிறப்பம்சம் இங்கு செயற்படுத்தப்படும் அடையாளச் சின்ன முறை (ரோக்கிண் முறை–(Token system). எவ்வளவு ரூபாய்க்குக் காய்கறிகள் வாங்க நினைக்கிறோமோ அவ்வளவு ரூபாயைக் கவுண்டரில் கொடுத்து ஒரு ரூபாய், ஐந்து ரூபாய்க்கான ரோக்கிண்களை வாங்கிக் கொண்டு பின் ரோக்கிண்களைக் கொடுத்து விரும்பிய காய்கறிகளை வாங்கிக் கொள்ளலாம். கடைசியில் ரோக்கிண்கள் மிஞ்சினால் அதைக் கொடுத்துவிட்டுப் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் சில்லறைப் பிரச்சனை எழுவதில்லை.

சிறப்புச் சந்தைகளில் வெளிக்காய்க்கறிச் சந்தைகளிலும் பார்க்க விலை கூடுதலாக இருப்பதாகச் சில வெளிவியாபாரிகள் கூறுகின்றனர். “மொத்த விலைக்கு வாங்கி, சரக்கை ஏற்ற இறக்க எனப் பல செலவுகள் ஏற்படுகின்றன. அதுதவிரக் காய்கறிகள் பழங்கள் என்பன அழுகும்பொருட்கள், இன்றே வாங்கி இன்றே விற்பனை செய்யப்படவேண்டியவை, இதனால் விலை சற்று உயர்த்தப்பட வேண்டி இருக்கிறது” என்று திரு பரமசிவம் கூறுகிறார். ஆனால் சிறப்புச் சந்தைகளுக்கு மக்களின் ஆதரவு இருப்பது அங்கு வரும் கூட்டத்தைப் பார்த்தாலே தெரிகிறது. “புதிதான காய்கறிகள், விலையும் குறைச்சல், வீட்டுக்குப் பக்கத்திலேயே சந்தை, எனது காய்கறிப்பிரச்சனை தீர்ந்தது” என்கிறார் மயிலாப்பூரில் வசிக்கும் இல்லத்தரசி மேனகா. “எல்லாக் காய்கறிகளையும் ஒரே இடத்தில் வாங்க முடிகிறது, விலையும் மலிவுதான்” என்கிறார் நுங்கம்பாக்கத்தில் வசிக்கும் குடும்பத் தலைவி லீலா.

சிறுவியாபாரிகள் நசுக்கப்படுகிறார்கள், அவர்களது பிழைப்புக் கெட்டுவிடுகிறது என்ற குற்றச்சாட்டும் தோன்றுகிறது. எது எவ்வாறு இருப்பினும் இத்தகைய சிறப்புச் சந்தைகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதை மறுக்க முடியாது. மக்கள் எப்போதுமே மாற்றத்தை விரும்புபவர்கள். வித்தியாசமானதை ஆர்வத்துடன் அணுகிப்பார்ப்பவர்கள். இதற்குச் சிறப்புச் சந்தைகள் விதிவிலக்கல்ல.



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) Account for the success of Mr Paramasivam's undertaking in Perambur, Chennai by writing full sentences on three aspects. **3**

- 
- 
- 

(b) Who might resist the change and why? **2**

(c) How does the writer show his reaction to the 'designated market' of Chennai? Give evidence from the text. **2**

(d) Explain the purpose of the token system. **1**


www.theallpapers.com

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## இலக்கிய கலாநிதி பண்டிதமணி

சிறந்த தமிழ் அறிஞரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். தமிழ் இலக்கணத்தையும், இலக்கியத்தையும் நன்கு கற்றார். சிறந்த அறிஞர்கள், புலவர்களிடம் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. மதுரைத் தமிழ்ப்பண்டிதர் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி பெற்ற பண்டிதமணி இலங்கையில் ஆசிரியர் பயிற்சியையும் பெற்றார்.

திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக நியமிக்கப்பெற்று ஓய்வு பெறும்வரை முப்பது ஆண்டுகாலம் அப்பதவியை வகித்தார். தமிழுக்கும், சமயத்திற்கும், தத்துவத்திற்கும் இவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்காக 'பண்டிதமணி' என்ற பட்டம் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகம் இவருக்கு 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தையும் வழங்கியது. நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். **1987**இல் தனது எண்பத்தேழாம் வயதில் இறைவனடி சேர்ந்தார். இவரைக் கௌரவிக்குமுகமாக இலங்கை அரசு சிறப்பு முத்திரை ஒன்றை வெளியிட்டு வைத்துள்ளது.

தனது துறையில் ஒப்பில்லாத அறிவும், மதிக்கப்படக்கூடிய பல தன்மைகளோடு கூடிய எழுத்தும், நகைச்சுவைப் பேச்சும் இவருக்கு இயல்பாயமைந்தவை. இலக்கியச் செய்யுள்களில் அநேகம் இவருக்கு மனப்பாடம். சிறந்த பேச்சாளர், திறமையான ஆசிரியர், ஆழ்ந்த சிந்தனையாளர், நேர்மையான ஆராய்ச்சியாளர் என்றெல்லாம் மதிக்கப்பட்ட பண்டிதமணி அவர்கள், சிறந்த தமிழறிஞர் மாணவர் பரம்பரையில் வந்ததுடன், அதிசிறந்த மாணவர் பரம்பரையையும் கொண்டிருந்தார். இவர் தனது ஆசிரியர்களிடமிருந்து பாடங்களைக் கற்றதுடன் அவர்களது பண்பாடு, பழக்கவழக்கம், ஒழுக்கம் என்பவற்றையும் அப்படியே பின்பற்றினார். தனது ஆசிரியர்களாகிய குருமாரைத் தெய்வமாக வணங்கி அவர்களைப் பாவனை செய்து வாழ்ந்தார்.

நல்லாசிரியர் ஒருவர் பிற்காலத்தில் மாணவர் சிறப்பினாலேயே மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வார் என்பதைப் பண்டிதமணி உணர்த்தியுள்ளார். இன்று தமிழ்பேசும் உலகில் தலைசிறந்து விளங்கும் அறிஞர்களும், பண்டிதர்களும் இவரிடம் பாடங்கேட்டோமே என்று பெருமை கொள்கிறார்கள். அன்பினால், அரவணைப்பால், நகைச்சுவையால் புகட்டும் பாடத்தால் மாணவர் மனங்களைப் பண்டிதமணி பெரிதும் கவர்ந்திழுத்தார்.



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) Using the information from the text, explain how students learned in Pandithamani's era. **2**

(b) In which way was Dr Pandithamani's work recognised and honoured? **3**

(c) Using the information from the text, summarise how Pandithemani's personal qualities helped in his teaching. **3**

(d) Provide an appropriate subheading for each paragraph. **4**

- 
- 
- 
- 


www.theallpapers.com

**Part B** (Question 9)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

9. Read the text and then answer the question in TAMIL on page 7.

## வாடகைக்குப் பகிர்ந்துகொள்ளுங்கள்

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். எமது பல்கலைக்கழகத்தில் இருந்து 7 நிமிட நடைத் தூரத்தில் அமைந்துள்ள வீடொன்றில், அறை ஒன்று வாடகைக்கு உள்ளது. அறை ஒன்றைப் பெறும் அதே சமயம், அருமையான நண்பர்கள் இருவருடன் ஒரே வீட்டில் தங்கும் அதிஷ்டம் பெறுகிறீர்கள்.

மூன்று அறைகளைக்கொண்ட அழகிய இவ்வீடு பல்கலைக்கழகக் கிழக்கு நுழைவாயிலுக்கு அண்மையில் அமைந்துள்ளது. வீதியைக் கடந்தால் விளையாட்டு மைதானம்.

நாமிருவரும் முறையே வர்த்தகப் பிரிவிலும் கணணிப் பிரிவிலும் இரண்டாம் வருடத்தில் கற்கும் தமிழ் பேசும் மாணவர்கள். நாம் படிப்பு, விளையாட்டு, களியாட்டங்கள் எதையுமே விட்டுவைப்பதில்லை. புதன்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் மரக்கறி உணவு சமைப்போம். ஆனால் வழக்கமாக அருகிலுள்ள சாந்திநிலையத்திலே சாப்பிடுவோம். பல்கலைக்கழக வாழ்வை மகிழ்ச்சியாகக் கழிக்கிறோம்.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
மதுபானப்பழக்கம் குறைவானவராக இருத்தல் நன்று.
செல்லப்பிராணிகளை இவ் வீட்டின் உட்புறத்தில் வளர்க்க விரும்பவில்லை.
கட்டணங்களில் மூன்றில் ஒருபங்கைச் செலுத்தவேண்டும்.
வாடகை வாரம் ஒன்றிற்கு 95 டொலர்கள்.
வாகனத்தரிப்பிடம் இரண்டு மட்டும் உள்ளதால் உபயோகம்பற்றிப் பேசித்தீர்மானிக்கலாம்.
தயவுசெய்து விண்ணப்பங்களைக் கடிதம் மூலம் டிசெம்பர் 20ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
அனுப்பவேண்டிய முகவரி:
கபிலன்
785 பிளேன்டி வீதி
பண்டூரா 3085
<u>குறிப்பு</u>
வீட்டைப் பார்வையிட விரும்பின் குறிப்பிடுங்கள். ஒழுங்கு செய்கிறோம்.
நன்றி.

QUESTION
As you are a student of this university, write a letter to Kapilan in 150–200 words in Tamil expressing your personal reasons for wanting to live in this household.

இப் பல்கலைக்கழக மாணவராகிய நீர் இவ்வீட்டை கபிலனுடனும் நண்பருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர். நீர் அவ்வாறு விரும்புவதற்குரிய காரணங்களை, அவரது விளம்பரத்திலுள்ள விடயங்கள் தொடர்பாகத் தெரிவித்து கபிலனுக்கு 150–200 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.


www.theallpapers.com

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 9



www.theallpapers.com

**End of Section 2**



www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2003 PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© *Victorian Curriculum and Assessment Authority 2003*

www.theallpapers.com

**Section 3** (Questions 10–13)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

10. You are a junior coordinator for a 24 hour telecasting service which is about to start. Write a persuasive article for a Tamil community newspaper to promote this venture.

    விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இருபத்தினான்கு மணிநேரத் தமிழ்த் தொலைக்காட்சிச் சேவை ஒன்றின் இளநிலை இணைப்பாளராக இருக்கிறீர். இச்சேவை பிரபலமடையத் தூண்டும் நோக்கில், தமிழ்ப் பத்திரிகையொன்றுக்குக் கட்டுரை ஒன்றைத் தயாரிக்கவும்.

11. A person staggered out of the house and wandered aimlessly towards the park …

    Continue this story imagining how a stranger might have helped.

    வீட்டிலிருந்து இலக்கு எதுவுமின்றி தடுமாறிய நிலையில் ஒருவர் வெளியே வந்து பூங்காவை நோக்கி நடந்தார்...

    என்று தொடங்கி, முன்பின் அறியாதவர் எவ்வாறு உதவியிருக்கலாம் எனக் கற்பனைக் கதை ஒன்றை எழுதுங்கள்.

12. You are a member of a well-established library in your state. Prepare an informative speech on ‘Services at my library’ to be delivered to a group of students in a Tamil-speaking country.

    நீர் உமது மாநிலத்தில் உள்ள சிறந்த நூலகம் ஒன்றில் அங்கத்தவராக இருக்கின்றீர். தமிழ் பேசும் நாடொன்றில் மாணவர் அமைப்பினர் சிலர் கலந்துகொள்ளும் ஒரு கூட்டத்தில் எனது நூலகத்தில் வழங்கப்படும் சேவைகள் என்ற தலைப்பில் தகவல்களை வழங்கி உரையாற்றுவதற்கான உரை ஒன்றைத் தயாரிக்கவும்.

13. Write an evaluative report for a magazine discussing the advantages and disadvantages of being a working mother.

    தொழில் புரியும் தாயாராக இருப்பதனால் ஏற்படக்கூடிய சாதகமான, பாதகமான நிலைமைகளை மதிப்பீடு செய்து அறிக்கை ஒன்றைச் சஞ்சிகை ஒன்றில் வெளியிடுவதற்காகத் தயாரிக்கவும்.

---

You may make notes in this space.



www.theallpapers.com

Question Number:



PLEASE TURN OVER

www.theallpapers.com

www.theallpapers.com

**End of Section 3**



www.theallpapers.com

BLANK PAGE

www.theallpapers.com

BLANK PAGE

www.theallpapers.com

BLANK PAGE

www.theallpapers.com